செய்தி வெளியீடு எண்.142 நாள்.09.03.2017

**திருவள்ளுர் மாவட்டத்திலுள்ள 5 வட்டாட்சியர்களின் தலைமையில் கீழ்கண்ட வருவாய் கிராமங்களில் 10.03.2017 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெற உள்ளது.**

~~~~~

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் திட்டமான அம்மா திட்டம் (AMMA - Assured Maximum Service to Marginal People in All Villages) திருவள்ளுா; மாவட்டத்திலுள்ள 5 வட்டாட்சியர்களின் தலைமையில் கீழ்கண்ட வருவாய் கிராமங்களில் 10.03.2017 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெற உள்ளது.

இதில் வருவாய்த் துறையின் முதியோா் ஒய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனை பட்டாக்கள், உழவா் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ், குடும்ப அட்டை, குடிநீா் பிரச்சனைகள், நிலம் சம்மந்தமான பிரச்சனைகள் குறித்து கோரிக்கை மனுக்களாக அளிக்கலாம். இக்கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான நபா்களுக்கு நலத்திட்ட உதவிகள் அன்றைய தினமே வழங்கப்பட உள்ளது. மேலும் உடனடி தீா்வு காணமுடியாத மனுக்கள் மீது தொடா் நடவடிக்கைகள் மேற்கொண்டு 30 நாட்களுக்குள் உரிய தீா்வு காணப்படும். அம்மா திடடம் நடைபெறும் இடங்களில் மருத்துவத்துறை மூலம் முகாம் நடத்தவும், பெண் குழந்தை பிறப்பை தடுத்தல், பெண் சிசுக்கொலையை தடுத்தல் போன்ற விழிப்புணா்வு பதாகைகளை பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் அமைக்கும்படியும், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் அனைத்துத்துறை தலைமை அலுவலா்களும் இம்முகாம்களில் பங்குகொண்டு, பொது மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கவும், வட்டார வளா்ச்சி அலுவலா்கள், திட்ட அலுவலா் (ஒருங்கிணைந்த குழந்தை வளா்ச்சித் திட்டம்), திட்ட அலுவலா் (மகளிா் திட்டம்), விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை போன்ற அனைத்துத் துறை அலுவலா்களும் அம்மா திட்டத்தில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு சேவை செய்ய வருகை புரிகிறாா்கள். என மாவட்ட ஆட்சியா் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவா்கள் தெரிவிக்கிறாா்.

**அம்மா திட்டம் 10.03.2017 (வெள்ளிக்கிழமை)**

| வ. எண் | வட்டத்தின் பெயர் | அம்மா திட்டம் நடைபெறும | கிராமத்தின் பெயர் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 1 | ஊத்துக்கோட்டை | அரியப்பாக்கம் கிராமம் | ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் உள்ள காலி இடத்தில |
| 2 | பொன்னேரி | நெய்தவாயல் -1 கிராமம் | கிராம நிர்வாக அலுவலகம் அருகில் உள்ள காலி இடத்தில |
| 3 | கும்மிடிப்பூண்டி | அயநல்லூர் கிராமம் | சமுதாயக் கூடத்தில் |
| 4 | திருத்தணி | ஆற்காடு கிராமம் | கிராம நிர்வாக அலுவலகம் அருகில் உள்ள காலி இடத்தில |
| 5 | பள்ளிப்பட்டு | காக்களூர் கிராமம் | கிராம நிர்வாக அலுவலகம் அருகில் உள்ள காலி இடத்தில். |

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~